**02.03.2020**

**பத்திரிக்கை செய்தி**

**சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 08.03.2020 அன்று மெட்ரோ இரயில் நிலையங்களில் இலவச பொது மருத்துவ முகாம்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், உடல்நலம் மற்றும் உயிரியல் தொழில்துறை அமைப்புடன் இணைந்து சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மெட்ரோ இரயில் பயணிகள், பொதுமக்கள் மற்றும் மகளிர் நலனுக்காக இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் வருகின்ற மார்ச் 08, 2020 அன்று காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் வடபழனி, செனாய் நகர் மெட்ரோ, விமான நிலைய மெட்ரோ, ஆலந்தூர், அசோக் நகர் மற்றும் சென்ட்ரல் மெட்ரோ ஆகிய 6 மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறுகிறது.

இந்த இலவச பொது சுகாதார முகாமில் பி.எம்.ஐ (உயரம் மற்றும் எடை), இரத்த அழுத்தம், சீரற்ற இரத்த சர்க்கரை, ஆலோசனைகள் போன்றவை வழங்கப்படும்.

மெட்ரோ இரயில் பயணிகள், பொதுமக்கள் மற்றும் மகளிர் இந்த இலவச மருத்துவ முகாமை பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.